# பத்திரிக்கை செய்தி குறிப்பு

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், தழுதாளி கிராமத்தைச்சேர்ந்த சௌந்தரராஜன் என்பவரின் மகன் ராதாகிருஷ்ணன் என்பவர் 31.07.2018 ஆம் தேதியன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் எழுத்து மூலமாக புகார் ஒன்றினை கொடுத்துள்ளார். அப்புகாரில் தான் திண்டிவனம் வட்டம் சாரம் கிராமத்தில் செயல்பட்டு வந்த 11584 என்ற TASMAC கடை பொதுமக்கள் பிரச்சனையால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கடையை மூடிவிட்டதாகவும், அதன் பிறகு விழுப்புரம் மாவட்ட TASMAC மேலாளர் திரு.சிவசாமி அவர்கள் எனக்கு திண்டிவனத்தில் உள்ள கடை எண் 11418க்கு பணியமத்தியதாகவும், அதன்படி நான் கடந்த 6.7.2018ந்தேதி கடைக்கு பணி செய்ய சென்றபோது அங்கிருந்த சூப்பரவைசர் வேலு மற்றும் அங்கிருந்து விற்பனையாளர்கள் ராமலிங்கம் மற்றும் செல்வகுமார் ஆகியோர் புகார்தாரரை பணிசெய்ய அனுமதிக்காமல் இருந்துள்ளனர். பணி செய்ய அனுமதிக்காதது குறித்து அங்கு பணிபுரிந்வர்களிடம் புகார்தாரர் கேட்டுள்ளார். அப்போது அவர்கள் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் பணிசெய்ய அனுமதிக்க வேண்டாம் என்று கூறியதாகவும், அதனால் நீ அவரை போய் பார் என கூறியுள்ளார்கள். அதன் பிறகு நான் கடந்த 26.07.2018 ந்தேதி டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்களை அவாது அலுவகத்தில் நேரில் சென்று என்னை கடை எண் 11418ல் பணிசெய்ய அனுமதி மறுக்கிறார்கள் என்று புகார்தாரர் கூறியுள்ளார். அதற்கு புகார்தாரரிடம் என்னிடம் உத்தரவு வாங்கிவிட்டால் போதுமா நான் போட்ட உத்தரவுக்கு எனக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்தால்தான் பணிபுரிய அனுமதிப்பார்கள் என்று டாஸ்மாக் மாவட்ட மேலாளர் கூறியுள்ளார். அதற்கு புகார்தாரர் என்னிடம் தற்போது பணம் இல்லை பிறகு தயார் செய்து தருகிறேன் என்று கூறியுள்ளார். அதற்கு டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நீ எப்போது பணம் தயார் செய்துகொண்டு வருகிறாயோ அப்போது உன்னை கடையில் பணிசெய்ய அனுமதிக்கின்றேன் என்று கூறியுள்ளார். அப்போது புகார்தாரர் எவ்வளவு தொகை என கேட்டுள்ளார். அதற்கு டாஸ்மாக் மாவட்ட மேலாளர் ரூபாய் 10,000/- என்று கூறியுள்ளார். அதற்கு புகார்தாரர் தொகை ரெடி செய்து கொண்டு வருவதாக தெரிவித்து பணம் கொடுத்து பணியிடமாற்றம் பெற விருப்பம் இல்லாததால் எனக்கு பணியிடமாற்றல் உத்தரவு வழங்குவதற்கு ரூபாய் 10,000/- லஞ்சம் கேட்கும் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.சிவசாமி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் படி 31.07.2018 ந்தேதி புகார் மனுகடந்த 20.10.2017ந்தேதி விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு வந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். அதன் பேரில் விசாரணை மேற்கொண்ட காவல் துணை

கண்காணிப்பாளர் மனுதாரரிடம் விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.சிவசாமி ரூபாய் 10,000/- லஞ்சம் கேட்டது உறுதியானதால் மேற்சொன்ன விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.சிவசாமி என்பவருக்கு எதிராக 03.08.2018-ந்தேதி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 04.08.2018-ந்தேதி ஒரு பொறி வைப்பு நடத்தப்பட்டது. பொறிவைப்பு நிகழ்வின் போது விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.சிவசாமி புகார்தாரர் ராமமூர்த்தியிடம் இருந்து ரூபாய் 10,000/- த்தை அவர் தங்கியிருக்கும் வழுதரெட்டி, VAO நகரில் உள்ள வாடகை வீட்டில் வைத்து வாங்கும்போது கையும் களவுமாக பிடிபட்டார். விசாரணைக்கு பின்னர் தன்னுடைய பதவியை தவறாக பயன்படுத்தி தன்னுடைய கடமையை செய்ய ரூபாய் 10,000/- லஞ்சம் பெற்றதாக கைது செய்யப்பட்டார். பின்னர் திரு.சிவசாமி அவர்களை விழுப்புரம் ஊழல் தடுப்பு வழக்குகள் நீதி மன்ற சிறப்பு நீதிபதி அவர்களிடம் ஆஜர்படுத்தி கனம் நீதித்துறை நடுவர் அவர்கள் உத்தரவுப்படி 04.08.2018 முதல் 15 நாட்கள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது.